ஸ்ரீராமஜயம்

## சேங்காலிபுரம் ப்ரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர்

சேங்காலிபுரம் கிராமம், வேதவித்துக்களும், தபஸ்விகளும், நித்யாக்னிஹோத்ரிகளும் வாஸம்செய்யும் க்ஷேத்ரமாக இன்றுவரை விளங்கிவருகிறது. இந்த க்ஷேத்ரம், கும்பகோணம் திருவாரூர் மார்கத்தில் உள்ள புதுக்குடியிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தூரத்திலும், குடவாசலிலிருந்து மூன்று கி.மீ தூரத்திலும் உள்ளது. இந்த கிராமத்தில் பரம்பரை பரம்பரையாக நித்யாக்னிஹோத்ரிகளாக விளங்கியவர்களின் பரம்பரையில் 1830-ஆம் ஆண்டு ஸ்ரீமுத்தண்ணாவாள் என்கிற ஸ்ரீவைத்யநாத தீக்ஷிதர் அவதரித்தார்கள். இவர்களது திவ்ய சரித்ரம் ஜயமங்கள ஸ்தோத்ரம் எட்டாம் பாகத்தில் உள்ளது. இவர்களது புத்ரர் ஸ்ரீ ஸுப்ரம்மண்ய தீக்ஷிதர் அவர்களும் நித்யாக்னிஹோத்ரி.

ஸ்ரீ ஸுப்ரம்மண்ய தீக்ஷிதர், மாதுஸ்ரீ. சுப்பலக்ஷ்மி அம்மாள் தம்பதிகளுக்கு, ஶோபக்ருத் வருஷம், ஆடி மாதம், 18-ஆம் தேதி, ஞாயிற்றுக்கிழமை (02.07.1903) தனது மாமாவின் கிருஹத்தில், பத்தூர் க்ராமத்தில், ஸ்ரீஅனந்தராம தீக்ஷிதர் சுப ஜனனம் செய்தார்கள். ஸ்ரீமுத்தண்ணாவாளின் ப்ரிய சிஷ்யரான பருத்தியூர் ஸ்ரீ கிருஷ்ண சாஸ்த்ரிகள் அவர்கள் ஸ்ரீ தீக்ஷிதருக்கு மூன்றாவது வயதில் அக்ஷராப்யாஸம் செய்து வைத்தார்கள். (பருத்தியூர் ஸ்ரீ கிருஷ்ண சாஸ்த்ரிகள் அவர்களைப்பற்றி, ஜயமங்கள ஸ்தோத்ரம் எட்டாம் பாகத்தில் ஸ்ரீமுத்தண்ணாவாளின் திவ்ய சரித்ரத்தில் உள்ளதைக் காணலாம்) ஸ்ரீதீக்ஷிதரின் ஐந்தாவது வயதில் இவரது பெரிய தகப்பனார் ஸ்ரீ ஸ்வாமிநாத தீக்ஷிதர் அவர்கள் ப்ரம்மோபதேசம் செய்தார்கள். தனது தகப்பனார் மற்றும் பெரிய தகப்பனாரிடம் வேதாத்யயனம் செய்தார்கள். காஞ்சி ஜகத்குரு ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளுக்கு சிறுவயதில் சாஸ்த்ரங்களை போதித்த விஷ்ணுபுரம் ஸ்ரீஸ்வாமிநாத சாஸ்த்ரிகளிடம், ஸ்ரீஸ்வாமிகளின் ஆக்ஞையின் பேரில் சாஸ்த்ரங்களை ஸ்ரீ தீக்ஷிதர் படித்தார். ஸ்ரீ சாஸ்த்ரிகள், தனது முதிர்ந்த வயது காரணமாக, தான் ஓய்வு எடுக்கும் சமயம், தன்னிடம் படிக்கவரும் மற்ற வித்யார்த்திகளுக்கு ஸ்ரீ தீக்ஷிதரையே காவ்ய பாடம் எடுக்கச்சொல்வார். அப்படி காவ்ய பாடம் எடுக்கும்போது, ஒருநாள் நைஷதத்தில் உள்ள ஶ்லோகத்திற்கு ஸ்ரீ தீக்ஷிதர் இரண்டு மூன்று விசேஷ அர்த்தங்களை விளக்கிச்சொல்லவும், அதைக்கேட்டுக்கொண்டே வந்த ஸ்ரீசாஸ்த்ரிகள், தனக்கும் தோன்றாத விசேஷ அர்த்தங்களை ஸ்ரீ தீக்ஷிதர் கூறுவதற்கு, தலைமுறை தலைமுறையாக அக்னியை ஆராதித்ததே காரணம் என்று சொல்லி சந்தோஷப்பட்டார்கள்.

ஸ்ரீதீக்ஷிதரின் தகப்பனார் ஸ்ரீஸுப்ரமண்ய தீக்ஷிதர், விஷ்ணுபுரத்தில் ஹாலாஸ்ய மாஹாத்ம்யம் தொடர்ந்து உபன்யஸித்து வரும்போது, நடுவில் ஒருநாள் தனக்கு வெளியூர் போக நேர்ந்ததால், ஸ்ரீதீக்ஷிதரை உபன்யஸிக்கச் சொன்னார். அதுவே ஸ்ரீதீக்ஷிதர் செய்த முதல் உபன்யாஸம். காஞ்சி ஜகத்குரு ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் சேங்காலிபுரம் விஜயம் செய்தபோது, இளவயது ஸ்ரீதீக்ஷிதருக்கு 'ப்ரஸன்ன ராக'வம்' என்ற புஸ்தகத்தை அனுக்ரஹித்துக் கொடுத்து ஆசீர்வதித்தார்கள். இதனால்தான், தனக்கு பலமுறை ஸ்ரீராமனைப்பற்றி உபன்யஸிக்கும் பாக்யம் கிடைத்தது என்று ஸ்ரீ தீக்ஷிதர் நம்பினார். பருத்தியூர் ஸ்ரீ கிருஷ்ண சாஸ்த்ரிகள், ஸ்ரீமுத்தண்ணாவாளின் மற்றொரு சிஷ்யரான சய்யானம் ஸ்ரீராமஸ்வாமி சாஸ்த்ரிகள், மாயவரம் ஸ்ரீ சிவராமகிருஷ்ண சாஸ்த்ரிகள், ப்ரஸங்கபா'னு ஸ்ரீ வைத்யநாத சாஸ்த்ரிகள், ராமாயணம் ஸ்ரீ நடேச சாஸ்த்ரிகள், ஸ்ரீ அப்பாஸ்வாமி சாஸ்த்ரிகள், குடவாசல் ஸ்ரீ நரஸிம்மாசாரியார் போன்ற பெரியவர்களின் உபன்யாஸங்களைக் கேட்டு, ஸ்ரீதீக்ஷிதருக்கு உபன்யஸிக்கும் ஆர்வம் அதிகமானது.

கடலங்குடி ஸ்ரீநடேச சாஸ்த்ரிகள் தம்பதிகள் ஒருமுறை ஸ்ரீஶ்ருங்கேரி 33-வது பீடாதிபதியான ஜகத்குரு ஸ்ரீநரஸிம்ஹ பாரதி ஸ்வாமிகளை தர்சனம் செய்யச் சென்றபோது, தம்பதிகளுக்கு பெண் குழந்தை பிறக்கும் என்றும், அந்தப் பெண்ணுக்கு சாரதாம்பா என்று நாமகரணம் வைக்கும்படியும், அந்தப்பெண்ணை ஆஹிதாக்னி குடும்பத்தில் கன்னிகாதானம் செய்து கொடுக்கும்படியும் சொல்லி ஆசீர்வதித்தார்கள். அதற்குப்பிறகு சாஸ்த்ரிகளின் தர்மபத்னி ஸ்நானம் செய்யாமல் இருந்து பெண்குழந்தை பிறந்தது. கடலங்குடி ஸ்ரீநடேச சாஸ்த்ரிகள் தனது மூத்த புத்ரி ஸ்ரீமதி சாரதாம்பாளை, ஸ்ரீதீக்ஷிதரின் பதினாறாவது வயதில் கன்னிகாதானம் செய்து கொடுத்தார். விவாஹம் திருவாரூரில் நடந்தது.

ஸ்ரீதீக்ஷிதர் தம்பதிகளுக்கு சுபத்ரா என்ற பெண் பிறந்தாள். இந்த பெண்ணை திருச்சி ஜில்லா மஹாதான புரத்தைச் சேர்ந்த ரிடையர்டு டிஸ்ட்ரிக்ட் போர்டு என்ஜினியர் ஸ்ரீ.எம்.கே. துரைஸ்வாமி ஐயரின் கனிஷ்ட புத்ரரான ஸ்ரீ.நாகரத்னம் ஐயருக்கு கன்னிகாதானம் செய்து கொடுத்தார். இந்த தம்பதிகளுக்கு இரண்டு புத்ரர்களும், ஒரு பெண்ணும் பிறந்தார்கள். முதல் புத்ரன் பிறந்து மூன்று வருஷம் கழித்து தனது புத்ரி கர்பமாக இருக்கும் தகவல் வந்த உடனேயே, மஹாதானபுரம் நேரில் சென்று, பிறக்கப் போவது ஆண் குழந்தை என்றும், தனக்கு அந்த குழந்தையை ஸ்வீகாரம் கொடுக்க அனுமதிக்க வேண்டும் என்றும் தனது ஸம்பந்தியிடம் ஸ்ரீதீக்ஷிதர் கேட்டுக்கொண்டார். இதே ஸமயம்,

மிக ப்ரஸித்தமாக விளங்கிய பந்துக்களான ஜோஸ்யர் ஒருவர், ஸ்ரீதீக்ஷிதரின் மாப்பிள்ளை, புத்ரி மற்றும் அவர்களது முதல் புத்ரனின் ஜாதகங்களைப்பரிசோதித்து, இரண்டாவது குழந்தை பெண் குழந்தையாக இருக்கும் என்று கூறியிருந்தார். ஆனால் ஸ்ரீ தீக்ஷிதரோ பிறக்கப்போவது ஆண் ப்ரஜை என்றும், தனக்கு ஸ்வீகாரம் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். பிறந்தது ஆண் குழந்தை. இந்த குழந்தையையே 27-01-1955 அன்று, சேங்காலிபுரத்தில் ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டு, தானே ப்ரும்மோபதேசமும் (உபநயனம்) செய்தார்கள். ஆண் குழந்தை பிறந்தபிறகு ஸ்ரீ தீக்ஷிதரின் மாப்பிள்ளையை சந்தித்த ஜோஸ்யர், தான் சொன்ன ஜோஸ்ய பலன், ஜோஸ்ய சாஸ்த்ரப்படி மிகச்சரியானதுதான் என்றும், பிறந்தது ஆண் ப்ரஜை என்பது ஸ்ரீதீக்ஷிதரின் தபஸ் மற்றும் வாக்ஸித்தியைக் காட்டுகிறது என்றும் கூறினார்.

கடலங்குடி ஸ்ரீநடேச சாஸ்த்ரிகள் எழுதியுள்ள ஸ்ரீமத்பாகவத உரையில் பல வ்யாக்யானங்களைக் கையாண்டதோடு, ஸ்ரீநாராயணீயம் என்ற க்ரந்தத்தையும் கண்டு எழுதியிருந்தார்கள். இதைப்படித்த ஸ்ரீதீக்ஷிதருக்கு ஸ்ரீநாராயணீயத்தில் ஈடுபாடு ஏற்பட்டது. இது ஸமயம், 1930-களில் கேரளாவில் உள்ள ஆலத்தூரில் உபன்யஸிக்கச் சென்றபோது, அதை ஏற்பாடு செய்திருந்த ஆலத்தூர் பாங்கர் ஸ்ரீ.எம்என்.ராமஸ்வாமி ஐயர் குடும்பத்தார், ஸ்ரீதீக்ஷிதரை ஸ்ரீகுருவாயூருக்கு அழைத்துச் சென்றார்கள். ஸ்ரீ தீக்ஷிதர் ஸ்ரீகுருவாயூரப்பனை தர்சித்தது இதுவே முதல் முறையாகும். அந்த மூர்த்தியிடம் ஆகர்ஷிக்கப்பட்டு பலமுறை தர்சனம் செய்யும் ஈர்ப்பு ஏற்பட்டது. அதுமுதல் எந்த உபன்யாஸம் ஆனாலும், நடுநடுவே ஸ்ரீநாராயணீயத்திலிருந்து ஶ்லோகங்கள் சொல்லி, ஸ்ரீ குருவாயூரப்பனின் மஹிமையை ஸ்ரீ தீக்ஷிதர் சொல்லாமல் இருந்ததில்லை.

கொச்சி இளையராஜா ஸ்ரீ குருவாயூரப்பனின் பக்தராவார். தன் உள்ளத்தில் ஸ்ரீகுருவாயூரப்பனை நிறுத்திவைக்கும் வகையில் உபன்யஸிக்கக்கூடியவரிடமிருந்து ஸ்ரீமத்பாகவதத்தை தான் கேட்கும் பாக்யம் தனக்கு கிடைக்கவேண்டும் என்று ஸ்ரீகுருவாயூரப்பனிடம் மனமுருக ப்ராத்தித்துக்கொண்டபோது, ஸ்ரீதீக்ஷிதரைக் காண்பித்துக்கொடுத்து, ஸ்ரீதீக்ஷிதரின் ஸ்ரீமத்பாகவத ஸப்தாஹ உபன்யாஸம் தன் ஸன்னிதியில் நடக்கப்போவதை ஸ்ரீகுருவாயூரப்பன் அருளினார். இதற்கு முன்பாக கோயம்புத்தூர் அயர்ன் அண்ட் ஸ்டீல் வ்யாபாரம் செய்து வந்த ஸ்ரீ நரஸிம்ம ஐயரின் கனவில், ஸ்ரீதீக்ஷிதரின் ஸ்ரீமத்பாகவத ஸப்தாஹ உபன்யாஸம் தன் ஸன்னிதியில் நடத்த ஸ்ரீகுருவாயூரப்பன் ஆக்ஞையிட்டார்.

ஸ்ரீதீக்ஷிதரும் தனக்கு கிடைத்த மஹத்தான பாக்யம் என்று புளகாங்கிதம் அடைந்து, குறிப்பிட்ட நாளில் குருவாயூருக்கு ஸ்ரீநரஸிம்ம ஐயருடன் வந்து சேர்ந்தபோது, கொச்சி இளையராஜா, ஸ்ரீகுருவாயூரப்பன் தனக்கு காண்பித்துக்கொடுத்த உபன்யாஸகரான ஸ்ரீதீக்ஷிதரை நேரில் முதல்முறையாக தர்சித்தார். ஆஞ்ஜம் ப்ரும்மஸ்ரீ மாதவன் நம்பூத்ரி மற்றும் பல மஹனீயர்களுடன் அமர்ந்து, கண்களில் தாரை தாரையாக ஆனந்த பாஷ்பம் கொட்ட ஸ்ரீபாகவத ஸப்தாஹ உபன்யாஸத்தை ஶ்ரவணம் செய்தார்.

ஸ்ரீ தீக்ஷிதர் பல க்ஷேத்ரங்களிலுள்ள தெய்வங்களைக்குறித்து ஸ்தோத்ரங்கள் க'வனம் (இயற்றி) செய்துள்ளார்கள். ஸ்ரீகுருவாயூரப்பன், திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதி பெருமாள், சிதம்பரம் ஸ்ரீநடராஜா, திருக்கருகாவூர் ஸ்ரீ கர்பரக்ஷாம்பிகை, ஸ்வாமிமலை ஸ்ரீ ஸ்வாமிநாதன், காஞ்சி ஸ்ரீகாமாக்ஷி, ஶ்ருங்கேரி ஸ்ரீசாரதாம்பிகை, ஸ்ரீ தீக்ஷிதரின் குலதெய்வமான ஸ்ரீ பாலசாஸ்தா, மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமி, திருப்பதி ஸ்ரீ வேங்கடாசலபதி பெருமாள், வைதீஶ்வரன்கோவில் ஸ்ரீ வைதீஶ்வரன் மற்றும் ஸ்ரீ பாலாம்பிகை, மயிலாப்பூர் ஸ்ரீகற்பகாம்பாள் ஆகிய தெய்வங்கள் பற்றிய ஸ்தோத்ரங்கள் இதில் அடங்கும். இவை தவிர, ஸ்ரீ முத்தண்ணாவாள், ஸ்ரீத்யாகப்ரம்மம் மேலும் ஸ்தோத்ரங்கள் இயற்றி உள்ளார். ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவாளின் ஆக்ஞைப்படி 'காமகோடி' பத்ரிகையில் ஸ்ரீ முத்தண்ணாவாளின் திவ்ய சரித்ரத்தை ஸ்ரீ தீக்ஷிதர் எழுதியதை, ஜயமங்கள ஸ்தோத்ரம் எட்டாம் பாகத்தில் காணலாம்.

ஸ்ரீகுருவாயூரப்பன் மீது இவர் செய்த பஞ்சரத்ன ஸ்தோத்ரம், ஒவ்வொரு ஶ்லோக முடிவிலும் பதினாறு நாராயண நாமாக்களுடன் கூறுவது மிகவும் பிரஸித்தமானது. திருக்கோயிலூர் தபோவனம் ஸ்ரீஞானானந்தகிரி ஸ்வாமிகள் ஆஶ்ரமத்தில், ஸ்ரீஸ்வாமிகளின் காலம் முதல்கொண்டு, தினமும் விடியற்காலையில் ப்ராதஸ்மரண ஸ்தோத்ரமாக ஸ்ரீதீக்ஷிதரின் ஸ்ரீகுருவாதபுரீச பஞ்சரத்ன ஸ்தோத்ரம் பாடப்பட்டு வருகிறது. முதலில் இயற்றியபோது ஐந்து ஶ்லோகங்களாக இருந்ததில், இந்த ஸ்தோத்ரத்தைப் படித்து பலன் அடைந்த பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ப²லஶ்ருதியாகவும், இன்னாரால் பாடப்பட்டது என்பதை விளக்கும் இரண்டு ஶ்லோகங்கள் ஸ்ரீதீக்ஷிதராலேயே சேர்க்கப்பட்டு மொத்தம் ஏழு ஶ்லோகங்களாக தற்போது பாடப்பட்டு வருகிறது. ஸ்ரீதீக்ஷிதர் இயற்றிய, கீழ்க்கண்ட ஸ்ரீகுருவாயூரப்பனின் த்யான ஶ்லோகம் மிக ப்ரஸித்தமானது. தற்போதும் பலராலும் கூறப்பட்டு வருகிறது.

पीताम्बरं करविराजित शङ्ख चक्र
कौमोदकी सरसिजं करुणासमुद्रम् ।
राधासहायं अतिसुन्दर मन्दहासं
वातालयेशं अनिशं हृदि भावयामि ।।

பீ1தா1ம்ப3ரம் க1ரவிராஜித ஶங்க2 சக்ர
கௌ1மோத3கீ1 ஸரஸிஜம் கருணா ஸமுத்3ரம்।
ராதா4ஸஹாயம் அதிஸுந்த3ர மந்த3ஹாஸம்
வாதாலயேஶம் அநிஶம் ஹ்ருதி3 பா4வயாமி।।

இதன் அர்த்தம்- 'பொன்னாடை தரித்தவரும், கைகளில் ஶங்க2ம், ச1க்ரம், க3தை3 (गदा), தாமரை இவைகளை தரித்தவரும், கருணைக் கடலானவரும், ஸ்ரீ ராதா தேவியுடன் கூடியவரும், மிக அழகான புன்சிரிப்புடன்கூடியவருமான ஸ்ரீ குருவாயூரப்பனை எப்பொழுதும் ஹ்ருதயத்தில் த்யானம் செய்கிறேன்.'

ஸ்ரீபாகவதத்தின் ஸாரமான ஸ்ரீநாராயணீயத்தில், அதை எழுதிய ஸ்ரீநாராயண பட்டத்ரி, ஏதோ காரணத்தினால், ஸ்ரீ பாகவதத்தில் முக்யமான ஜடபரத சரித்ரத்தை எழுதவில்லை. இந்த சரித்ரத்தை ஸ்ரீ தீக்ஷிதர் அவர்கள் ஸ்ரீபட்டத்ரியின் ஸ்லோக நடையிலேயே தானே இயற்றியதை, (ஸ்ரீ தீக்ஷிதர் தமிழ் உரையுடன் கூடிய) ஸ்ரீநாராயணீய புஸ்தகத்தில் சேர்த்து வெளியிட்டுள்ளது. இயற்றியதை, சிஷ்யர்களுடன்கூட ஸ்ரீகுருவாயூரில், ஸ்ரீகுருவாயூரப்பன் ஸன்னிதியில் நிர்மால்ய தர்சன காலத்தில் ஸ்ரீதீக்ஷிதர் சொல்லி ஸ்ரீகுருவாயூரப்பன் ஸன்னிதியியே அரங்கேற்றமும் ஆனது.

1967-ஆம் வருஷம், ஸ்ரீகுருவாயூரப்பனுக்கு வழங்கும் அரிசியை அப்போதைய கேரள அரசாங்கம் குறைத்துவிட்டது. வெளி மாநிலங்களிலிருந்து அரிசியை வரவழைப்பதற்கும் பல தடைகள். ஸ்ரீகோயில் மேல்சாந்திக்கும். தேவஸ்வம் போர்டு சேர்மனுக்கும், கோவில் ட்ரஷரருக்கும், ஒரே ராத்ரியில், ப்ரம்மசாரி பாலகனாகத் தோன்றி, அப்போது மதராஸில் (சென்னை) உபன்யஸித்துவரும் ஸ்ரீதீக்ஷிதரை நேரில் போய்ப்பார்த்து, நிவேதனத்திற்கு அரிசி தேவையான விஷயத்தைத் தெரிவிக்கும்படி, ஸ்ரீகுருவாயூரப்பன் உத்தரவிட்டார். கோயில் நிர்வாகிகள் மறுநாள் மதராஸில் ஸ்ரீதீக்ஷிதரை சந்தித்து விஷயத்தைக்கூறவே, பரபரப்படைந்த ஸ்ரீதீக்ஷிதர், அப்போதைய சீஃப் செக்ரட்டரி ஸ்ரீ.கே. சொக்கலிங்கம் ஐ.ஏ.எஸ், அவர்களை அணுகலாம் என்றால், கேம்ப் சென்றுள்ள அவர் மதராஸ் திரும்ப நாள் ஆகும் என்று தெரியவந்தது. இதனால் அப்போதைய முதல் மந்திரி ஸ்ரீ.அண்ணாதுரை அவர்களுக்கு ஸ்ரீதீக்ஷிதர் ஒரு லெட்டர் கொடுத்தார். மறுநாள் முதல்

மந்த்ரியை சந்திக்க கோயில் நிர்வாகிகள், காலை எட்டு மணிக்கே சென்று லெட்டரை அங்குள்ள உதவியாளரிடம் கொடுத்து காத்திருந்தார்கள். வெகுநேரமாகியும் பதில் இல்லாததைக்கண்டு, முதலமைச்சருக்கு அரிசி அனுப்புவதில் ஸம்மதம் இல்லைபோ என்று நினைத்து, கோயில் நிர்வாகிகள் திரும்பிக்கிளம்ப எத்தனித்தபோது, முதல்வரின் உதவியாளர் இவர்களை உள்ளே அழைத்தார். இவர்களை வரவேற்ற முதலமைச்சர், ஒரு வேகன் லோடு அரிசி, முதல் தவணையாக சென்ட்ரல் ஸடேஷனிலிருந்து திருச்சூருக்கு கிளம்பிய தகவல் வந்தவுடன் அவர்களை உள்ளே அழைத்துச் சொல்லுவதற்காக காத்திருந்ததாகத் தெரிவித்தார். இதைத்தொடர்ந்தும் அரிசி அனுப்பியது தமிழ்நாடு அரசாங்கம்.

ஒரு வருஷத்திற்கும் முன்பாகவே உபன்யாஸத்திற்கு தேதிகள் ஒப்புக்கொள்ளப்படுவது வழக்கமாக இருந்துவந்த போதிலும், பம்பாய் ஆஸ்திக ஸமாஜம், சென்னை ஆஸ்திக ஸமாஜம், கொல்லங்கோடு முதலிய எல்லா இடங்களிலும், மறுவருஷம் வேறு பல நல்ல வளர்ந்துவரும் உபன்யாஸகர்களை அழைத்து நடத்தும்படி ஸ்ரீதீக்ஷிதர் 1968-ல் கூறியதின் அர்த்தத்தை அழைத்தவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

ஸ்ரீதீக்ஷிதர் அவர்கள் 1969-ஆம் வருஷம் நடந்த ஸ்ரீவைதீஸ்வரன்கோயில் கும்பாபிஷேகத்தில் செய்ததே கடைசி உபன்யாஸம். அதன்பிறகு தேஹ அஸௌக்யம் காரணமாக சேலம் திரும்பினார். வைத்யர்களின் ஆலோசனையின் பேரில் சென்னை வி.எச்.எஸ்.ஆஸ்பத்ரியில் அனுமதிக்கப்பட்டார். ஏழு வாரங்கள் சிகித்ஸைக்குப்பிறகு தேஹ நிலையில் முன்னேற்றம் தெரிந்த ஸமயம், 21.10.1969 அன்று எவரும் எதிர்பாராமல், ஸன்யாஸம் பெற்றுக்கொண்டார். உடன், 'கல்கி' பத்ரிகையில் வெளிவந்த கட்டுரை பின்வருமாறு.

## துறவியானார்

வாக்கில் ஊறிய உண்மை இறுகி ஏதோ ஒரு விநாடியில் வாழ்க்கையாகி விடுகிறது. அறிவில் ஊறிய தத்துவம் முறுகி ஏதோ விநாடியில் அனுபவமாகிவிடுகிறது. 'ஏதோ ஒரு விநாடி' அருமையிலும் அருமையாக எவரோ ஒருவருக்குத்தான் வாய்க்கிறது. சேங்காலிபுரம் தீக்ஷிதரவர்கள் அப்படிப்பட்ட அருமையிலும் அருமையான ஒருவராகிவிட்டார். வாழ்க்கையின் உட்பொருள், வாழ்க்கையைத் துறக்கும் சந்நியாசத்திலேயே உள்ளது என்று நீண்டநெடுங்காலமாக உபதேசித்துவந்துள்ள அவர், இன்று அந்த உபதேசத்துக்குத் தாமே பாஷ்யமாகி விட்டார்.

அடையாறு வி.ஹெச்.எஸ்.மருத்துவமனையில் ஏழு வாரங்களாக சிகித்ஸை பெற்று வந்த தீக்ஷிதர், அக்டோபர் 21ந் தேதி, ஏகாதசி புண்ணிய தினத்தன்று ஓர் அற்புதமான திடசங்கல்பம் கொண்டார்.

உடல், உடல் நோய், சிகித்ஸை இவற்றிலிருந்து மனத்தை அப்படியே விடுவித்துவிட்டார். 'இனி எனக்கு மருந்தும் மாயமும் வேண்டாம்' என்றார். சிகித்ஸை அளித்துவந்த மருத்துவர்களைத் திருப்பி அனுப்பினார். 'சந்நியாசம் வாங்கிக்கொள்ளப் போகிறேன்' என்று அழுத்தமாகக் கூறினார்.

அந்திம காலத்தில் 'ஆபத் சந்நியாசம்' என்று வாங்கிக் கொள்வதுண்டு. துறவியாகி தேக வியோகமாவது, புண்ணியம் என்ற கருத்தில், ஒரு வேளை தீக்ஷிதரவர்களும் இப்படித்தான் எண்ணிவிட்டாரோ என உறவினர் நினைத்தனர். பிற்பாடு உடல் குணமானால் அவர் இல்லத்தையும், செல்வத்தையும் துறந்து வாழ நேருமே என்பதை அவர் எண்ணிப்பார்த்தாரோ என சம்சயித்து அவரிடமே கேட்டனர். ஆனால் மெலிந்த உடலிலும் தளராத உறுதியோடு அவர், வியாதி, மரணம், இவற்றை நினைத்துத் தாம் சந்நியாசம் மேற்கொள்ளவில்லை என்பதையும், சந்நியாசியாக வேண்டும் என்பதற்காகவே துறவறம் ஏற்பதையும் தெளிவு செய்தார். முற்றிலும் சத்தியமான வார்த்தை. ஏனெனில், எவ்விதமான உடல் உபாதையும் இன்றி, அவர் சொஸ்தமாக இருந்தபோதே, இரண்டாண்டுகளுக்கு முன்னமே சேலத்தருகே தமது சமாதிக்கென ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்து வைத்துவிட்டார். கடைசிக் காலத்தில் துறவறம் மேற்கொண்ட மூதாதை முத்தண்ணாவின் ரத்தம் அல்லவா அவர் மேனியில் ஓடுகிறது.

வேதவித்துக்களை வரவழைத்தார். மந்திரங்களை ஓதச்சொன்னார். தாமும் திரும்பச்சொன்னார். அவர்கள் தயங்கிய இடத்தில் தாமே எடுத்துக்கொடுத்தார். நினைவு வருவதும் தப்புவதுமாக இருந்த அவருக்கு இவ்வளவு திடமான பிரக்ஞை உண்டானதே அதிசயம்.

மலை போன்ற மேனியில் சிற்றருவி போல் ஓடும் புனிதப் பூணூல் அறுந்தது. புன்சிரிப்பு மாறாத முகத்தில், காதுகளில் புன்னகை புரியும் கடுக்கன் கழற்றப்பட்டது. துவராடை உடலை அணைத்தது. தண்டமும் வந்தது. பிரணவ ஜபம் தொடங்கிவிட்டார் புதிய சந்நியாசி.

'சிகித்ஸை வேண்டாம்' என்றபின் மருத்துவமனையில் இருக்கவேண்டியதில்லையன்றோ. இனி இல்லம் அவருடையது அல்ல. இல்லத்தினரைத் தம்மவராக அவர் எண்ணவும் இல்லை.

எனினும் மிகவும் சுகவீனமுற்ற நிலையில் அவரைச் சேலத்தில் இல்லத்துக்கு அழைத்துச்செல்வதே யுக்தம் எனக்கருதி அதற்கு அநுமதி கேட்டார். அவரது குடும்பத்தில் ஒருவராகிவிட்ட ஸ்ரீ.எஸ்.ஜி.ரத்தினம் அய்யர் அவரும் தயவுடன் சம்மதம் தந்தார். எனினும் சுசுரூஷை செய்ய உறவினரை அனுமதியாமல் சீடர்களுக்கே அனுமதி தந்தார். 'மாமா' என்று யாரோ உறவுமுறை சொல்லி அழைத்தார்கள். 'மாமா இல்லை. ராமா என்று சொல்' என்றார்.

சேலத்துக்குப் புறப்படுகிற சமயம். இனி உபன்யாஸக அனந்தராம தீக்ஷிதராக அவர் சென்னை திரும்ப மாட்டார் என்று அனைவரும் உருகிய சமயம். தீக்ஷிதர் அவர்களின் ஆசீர்வாதத்துக்கு மிகவும் பாத்திரமாகியுள்ள ஸ்ரீமதி எம்.எஸ். அவர்கள் மனம் நெகிழ்ந்து. அவருக்கு மிகவும் விருப்பமான சில பாடல்களைப் பாடினார். 'மரிப்போரின் செவியில் எந்த ராமனின் பெயரைச் சிவபெருமான் காசியில் மொழிகிறானோ. அந்த ஏகனை. பரமனை. தாரக ப்ரம்மனை வணங்குகிறேன்' என்ற ஆதிசங்கரரின் சுலோகத்தைப் பாடுகையில் உணர்ச்சிப் பெருக்கில் 'பரமனை' என்ற இடத்தில் தடைப்பட்டது. 'பரம்' என்று பளிச்சென எடுத்துக் கொடுத்தார் துறவி. மிகவும் நோயுற்ற தருணத்தில் அந்திம சமயம் பற்றிய சுலோகத்தைக் கேட்பதால் ஏற்படக்கூடிய கலக்கத்தின் சாயல்கூட இல்லை. எதற்கும் தயாராகிவிட்ட விரக்தி.

'ஏதேனும் சொல்ல வேண்டுமெனத் தோன்றுகிறதா?' என்று பரிந்து பரிந்து கேட்டார் ஸ்ரீ.சதாசிவம். 'தோணலை' என்று நிச்சயமாகக் கூறிவிட்டார் சந்நியாசி.

மனிதத் தன்மைக்கும் வாஞ்சைக்கும் பெயரெடுத்த தீக்ஷிதரவர்கள் பற்றற்ற துறவு நிலையை மனமார ஏற்ற நெகிழ்ச்சி. இன்றைய பாப உலகில் மறக்கவொண்ணாத புண்ணிய சம்பவமாகும்.

ஸன்யாசம் பெற்ற பின்பு அவ்வப்போது பிரணவ ஜபம் செய்துவந்து, ஏழாவது நாள் ஸ்ரீ நாராயணீயத்தில் கடைசி தசகத்தில் 'ஹ்ருத்[3]யம் பூர்ணாநுகம்பார்ணவ . . . . க்ஷிப்யதாம் மய்யநாதே[2]' என்னும் ஶ்லோகத்தை உரக்கக்கூறி, அதன் அர்த்தத்தையும் சொல்லி, ஸ்ரீகுருவாயூரப்பன் அநாதனான தன்னை ரக்ஷிக்க வேண்டும் என ப்ரார்த்தித்து மூடிய கண்களைத் திரும்ப திறக்கவில்லை. பத்தாவது நாள் *30.10.1969* அன்று ஸாயங்கால

வேளை, உள்ளூர் வைதீகர்களும், பக்தர்களும் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்தை ஒரு முறை கூறி, இரண்டாவது முறை கோஷிக்க ஆரம்பித்த போது, மூன்று முறை உள்ளுக்கிழுத்த பிராணன் மறுபடி வெளிவராமல் அப்படியே அடங்கியது.

அதைத்தொடர்ந்து 'கல்கி' வெளியிட்ட தலையங்கம்.

## ஆஸ்திக ஜோதி அஸ்தமித்தது

கலியின் இருளிடையே ஒளி கூட்டி வந்த தர்ம ஜோதிகளில் ஒன்று அணைந்து விட்டது.

நாஸ்திகமும், விபரீத விஞ்ஞானமும், வெற்றுப் பகுத்தறிவும் பரவி வந்தபோது, பகவந்நாம ஒளியைப் பரப்பிவந்த பக்திப்பிழம்பு அணைந்து விட்டது.

துராசாரமும், பாரதப்பண்புக்கு ஒவ்வாத நடைமுறைகளும் கிளர்ந்தெழுந்தபோது, ஆசார அனுஷ்டான கிரணங்களைப் பரப்பிவந்த ஆஸ்திகத் திருவிளக்கு அணைந்துவிட்டது.

துவேஷமும், பொறாமையும், வசைமொழியும் மலிந்த இவ்வுலகில் அன்புமயமாக, வஞ்சனையற்ற வாஞ்சை மயமாக, மதுர வாக்கின் மூர்த்தியாகத் திகழ்ந்த உயிர்ச்சுடர் அணைந்துவிட்டது.

இல்லறத்தை நீத்துத் துறவியான சேங்காலிபுரம் பெரியவர்கள் இவ்வுலகையேவிட்டு மறைந்து விட்டார்கள்.

சநாதன தர்மத்தின் மறுமலர்ச்சிக்கு ஓர் ஆணிவேராக, பக்தி மண்டபத்துக்கு ஒரு மைய ஸ்தம்பமாக விளங்கிய சேங்காலிபுரம் பெரியவர்களின் மறைவை ஒருகாலும் ஈடு செய்யவே இயலாது. அவரோடு ஒரு சகாப்தமே முடிந்துவிட்டது.

'ஶ்ருதி ஸாக³ரம்' என்று ராஜாஜி குறிப்பிட்ட அந்த வேதக் கடலைக் காணோம் என்று எண்ணும்போதே 'சொரேல்' என்கிறது. தர்ம தத்துவங்களை, ஆசார நெறிகளை விட்டுக்கொடுக்காமல், அடித்துச் சொல்லும்போதே, தமது அன்புப் பான்மையால் தாய்போல அணைத்தும் சொல்கிற இங்கிதம் வாய்ந்த அம்மகானைப் போல் ஒருவரை இனி எங்கு காண்போம்?

ஞானத்தின் கம்பீரமும், பக்தியின் கசிவும் ஒருங்கேகூடிய சாரீரத்தால் உணர்ச்சிபொங்க உத்கோஷிக்கப்பட்ட அந்தத் தேவ பாஷை சுலோகங்களை இனி எங்கு கேட்போம்?

பரிவு சொட்டச் சொட்ட அனைவரையும் விசாரித்துத் துயர் நீக்கும் இன்முகத்தை எங்கு காண்போம்?

பரமனிடம் பக்தி. ஜன சமூகம் அனைத்திடமும் அன்பு. ஒருவரிடம் எவ்வளவு குற்றம் இருப்பனும். அதைப்பொருட்படுத்தாமல். அவரிடமுள்ள சிறிதளவு குண நலனை மதித்து. அதைப்பற்றி எடுத்துச் சொல்லிக் கொண்டாடுகிற பெருந்தன்மை. அதன் முலம் தோஷமுள்ளவர்களையும் வெகு பக்குவமாக குணசீலர்களாக்கிய ஆற்றல் இதையெல்லாம் எவரிடம் காண்போம்?

சேங்காலிபுரம் பெரியவர்கள் எடுத்துரைத்த உண்மைகளில் அவரது அறிவு மட்டும் பிரகாசிக்கவில்லை. அவரது இதயமும் அவற்றில் ஆழ மூழ்கித்திளைத்திருந்தது. இது காரணமாகவே அவரது வாக்குக்கு ஓர் அற்புத மந்திர சக்தி இருந்தது. பக்தியும். வைதிக ஆசரணைகளும் மிக நலிந்துவந்த தருணத்தில் மீண்டும் அவற்றுக்கு நவஜீவனம் தந்து. பாரதத்தை மெய்யாகவே பாரதமாக்கும் மகத்தான புண்ணியத் திருப்பணியில் அதிமுக்கியமான ஸ்தானம் வகித்தவர் சேங்காலிபுரம் பெரியவர்கள்.

இது முடிவுபெறாத திருப்பணி. பணி முடிவுபெறும் வரையில் அதில் அர்ப்பணமாக ஈடுபட்ட உயிருக்கும் முடிவில்லை.

சேங்காலிபுரம் பெரியவர்கள் உடலைத் துறந்துவிட்டாலும் தர்ம உத்தாரணத்தையே கருதிய அவர்களின் அன்புச்சக்தி என்றென்றும் நம் தேசத்தைக் காத்துவரும். நம் சிற்றறிவுக்கு எட்டாத சூட்சுமமான முறையில் காத்துவரும். ஐயமில்லை.

'அழிவு உடலுக்கே. ஆன்மாவுக்கு அல்ல. இதை உணர்ந்தவன் உடலின் அழிவைக்கண்டு துக்கிப்பதில்லை' என்று சேங்காலிபுரம் பெரியவர்களின் உள்ளத்தில் குடிகொண்ட குருவாயூரப்பன் கூறிய மொழிகளே இன்று நமக்கு ஆறுதல் தரவேண்டும்.

*ஸ்ரீதீக்ஷிதர் அவர்கள் அதிஷ்டானம், சேலம் டவுன் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து சுமார் மூன்று கி.மீ. தூரத்தில், சின்னதிருப்பதி ஸ்ரீவெங்கடேச பெருமாள் கோயிலின் வடக்கு புறத்தில் உள்ள குளத்தின் கிழக்கு கரையில் உள்ளது. இந்த இடத்தை சுமார் இரண்டு வருஷங்களுக்கு முன்னமேயே தேர்ந்து எடுத்திருந்தார். ஸ்ரீஅதிஷ்டானத்தில் நித்ய பூஜையும் வருஷாவருஷம், ஐப்பசி மாதம், க்ருஷ்ணபக்ஷ ஷஷ்டிக்கு மறுநாள், வேத பாரயணம், நாமஸங்கீர்த்தனத்துடன் ஆராதனை நடந்து வருகிறது.*